**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**124/2016

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 12.02.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | ஜாதி | : |
| க/பெயர் | : கண்ணன் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

பி.சா.1 முன்னிலை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண்.231/3, 231/4 ல் தாவா சொத்த தமிழரசன் என்பவருக்கு பாக வீதமாக கிடைக்கப்பெற்றது என சொல்லியுள்ளது தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வதுபோல் பாகபத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்து தமிழரசனின் தாயாருக்கு சொந்தமான சொத்தாகும். தாவா சொத்து தமிழரசனின் தாயாருக்கு சொந்தமானது என்பதை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். தமிழரசனிடம் வெவ்வேறு தேதிகளில் மொத்தம் 2 ஏக்கருக்கு விலை நிர்ணயம் செய்து தொகை செலுத்தப்பட்டதாக சொல்லியுள்ளதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். தமிழரசனிடமிருந்து நான் என்ன ஆவணம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் கிரையம் செய்தவற்கு 20 ரூ பத்திரம் வாங்கியுள்ளேன். ஒரு வருடம் கெடு வைத்து அந்த ஆவணம் எழுதப்பட்டது.

ஒருவருடம் காலக்கெடு முடிந்தபின்னர் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க தமிழரசனிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். கிரையம் செய்து தருவதாக சொல்லிவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார். தமிழரசன் கிரையம் செய்து தருவதாக சொல்லிவிட்டு, கிரையம் செய்து தராத தொடர்பாக சட்டநடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. கிராமத்தில் வைத்து பேசப்பட்டது. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் தான் நாளது தேதி வரை இருந்து வருகிறது.

வசந்தா தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்து தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். ஏப்ரல் மாதம் 2016 வருடத்திலிருந்து தற்போது வரை என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. தாவா சொத்து தொடர்பாக தமிழரசன் என் கணவரிடம் தான் ஒப்பந்தம் செய்துள்ளார். தாவா சொத்தை காலி செய்து கொடுக்கும்படி கடந்த 2016-ல் வாதி அறிவிப்பு அனுப்பினரா என்றால் இல்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் கடந்த 2016 ல் அறிவிப்பு அனுப்பினார் என்றும், கிராம முக்கியதஸ்தர்கள் பேசிகொள்ளலாம் என சொன்னதால் பதிலறிவிப்பு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

தாவா வழக்கு தொடர்பாக இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிறைவேற்று மனு தாக்கல் செய்து, சொத்தின் சுவாதீனத்தை எடுப்பதற்காக அமீனா வந்தற்கு பின்னிட்டு தான் ஒருதலைபட்ச உத்தரவை நீக்கம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது கடந்த 1994 வசந்தா பெயரில் கிரையம் பெறப்பட்டது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்தற்கு பின்னிட்டு அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஏற்கனவே அந்த ஆவணத்தை பார்த்துள்ளேன்.

தாவா சொத்து தொடர்பாக தமிழரசன் எனது கணவரிடம் கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லப்படும் ஆவணத்தை நாளது தேதி வரையில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கும் தமிழரசனுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும், அதனால் தான் தமிழரசன் ஏற்படுத்திக்கொடுத்தாக சொல்லப்படும் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் தாவா சொத்து

தமிழரசனுக்கு சொந்தமானதாக இருந்து இருந்தால் அவர் மீது சட்டநடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதிக்கு சொந்தமான தாவா சொத்தை அத்துமீறி அபகரித்து வைத்துள்ளதால் அவற்றை வாதியிடம் சட்டபடி ஒப்படைக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கும் எனக்கும், எனது கணவருக்கும் இடையில் ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆனால் வாய்மொழியாக தாவா சொத்தை கிரையம் செய்து கொடுப்பதாக வாதி சொன்னார்.

வாதி வசந்தாவிற்கு சொந்தமான சொத்தை அவரிடம் கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டால் மட்டும் தான் பரிகாரம் கேட்கமுடியும் என்றாலும், அவரிடம் ஒப்பந்தம் போடமாமல் தாவா சொத்தை அபகரித்து வைத்துள்ளது தவறானது என்றால் சரியல்ல. நாளது தேதி வரையில் தாவா சொத்தின் அனுபவம் எங்களிடம் தான் உள்ளது. எனக்கு வாதி தரப்பில் உரிய சட்டநடவடிக்கை எடுப்பதற்காக அறிவிப்பு அனுப்பி அதற்கு பதிலறிவிப்பு எதுவும் அனுப்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றாலும், அவரிடம் தாவா சொத்தை ஒப்படைக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

District Munsif
Mannargudi.